**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : CC 244/2024 (33/2023) |
| Deposition of witness for | Prosecution : LW7 as PW6 |
| | Defence : |
| | Court : |
| Name : பரணி | Father's Name: ராஜேந்திரன் |
| | Husband Name: |
| Village: மேட்டுச்சத்திரம் | Taluk : |
| Caste : | Calling : |
| Religion: | Age : 35 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04.07.2025

**எதிரி ஆஜர் இல்லை குவிமுச பிரிவு 317ன் மனு செய்து அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது மேட்டுச்சத்திரத்தில் வசித்து வருகிறேன். நான் பால் விற்கும் பணியை செய்து வருகிறேன். அ.சா.1யைத் தெரியும், அ.சா.2 பிரசாந்த் மற்றும் அ.சா.3, அ.சா.4, அ.சா.5 ஆகியோரைத் தெரியும், அனைவரும் எனது பங்காளிகள் ஆவார்கள். 03.07.2022ம் தேதி காலையில் பொது விஷேஷத்திற்காக தளவாய்குளம் சந்தைக்கு செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் Splendor plusல் ஐந்து வீடு அருகே சென்ற போது டாடா ஏசி ஒரு லிட்டர் கேன்களை ஏற்றி செல்லும் 4 சக்கர வாகனம் மோதியதாக எனக்கு போன் மூலமாக சொன்னார்கள். நான் உடனே சம்பவயிடத்திற்கு வந்து பார்த்தேன் அப்போது ராஜா இறந்து கிடந்தார். மேற்படி அந்த நான்கு சக்கர வாகனமும் அங்கு இருந்தது. வேட்டவலத்தில் இருந்து திருவண்ணாமலையை நோக்கி அந்த தண்ணீர் வேன் வந்தது. திருவண்ணாமலையில் இருந்து தளவாய்குளம் சந்தைக்கு ராஜா வந்துள்ளதாக மேற்படி சம்பவயிடத்தில் இருந்த வாகனங்களைப் பார்த்து தெரிந்துகொண்டேன். மேற்படி நான்கு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் யார் என்று எனக்கு தெரியாது. மேற்படி நான்கு சக்கர வாகன எண்ணும் எனக்கு தெரியாது பின்னர் ஆம்புலென்சில் ராஜாவை

ஏற்றிக்கொண்டு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு ராஜாவின் உடலை சடலக்கூறாய்வு செய்து கொடுத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

போலிசார் என்னை விசாரித்த போது போனில் தகவல் வந்தபிறகு நான் சம்பவயிடம் சென்று பார்த்தேன் என்று நான் சொன்னேன் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : CC 244/2024 (33/2023) |
| Deposition of witness for | Prosecution : LW6 as PW5 |
| | Defence : |
| | Court : |
| Name : கனகராஜ் | Father's Name: கோபால் கவுண்டர் |
| | Husband Name: |
| Village: மேட்டுச்சத்திரம் | Taluk : |
| Caste : | Calling : |
| Religion: | Age : 59 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04.07.2025

**எதிரி ஆஜர் இல்லை குவிமுச பிரிவு 317ன் மனு செய்து அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது மேட்டுச்சத்திரத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1யை எனக்கு தெரியும். அ.சா.2 பிரசாந்த் தெரியும். அ.சா.3 தாமரைகனி எனது மகன் ஆவார். அ.சா.4ம் எனக்கு தெரியும் அவர் எனக்கு அண்ணன் முறை ஆவார். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் காலை 7 மணிக்கு போன் வந்தது. அந்த போனில் ராஜா விபத்தில் இறந்துவிட்டார் என்று சொன்னார்கள். மேற்படி இறப்புச் செய்தியை எனது மகன் தாமரைகனி எனக்கு சொன்னார். பின்னர் நான் டாடா ஏசி மூலமாக அந்த விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். மேற்படி அதை ஓட்டி வந்த நபர் யார் என்று எனக்கு யாரும் சொல்லவில்லை. பின்னர் நான் மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு அதன் பின்னர் அங்கிருந்து கீழ்பென்னத்தூர் காவல் நிலையத்திற்கு வந்து புகார் கொடுத்தோம். பின்னர் மீண்டும் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கிருந்து ராஜாவின் பிரேதத்தைப்பெற்றுக்கொண்டு வீடு திரும்பினோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>** இல்லை

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.<br><br>Sd/- (M.C.Arun)<br>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,<br>கீழ்பென்னாத்தூர் |

**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : CC 244/2024 (33/2023) |
| Deposition of witness for | Prosecution : LW 5 as PW4 |
| | Defence : |
| | Court : |
| Name : சக்கரபாணி | Father's Name: பெரியசாமி |
| | Husband Name: |
| Village: மணியந்தல் மேட்டுச்சத்திரம் | Taluk : |
| Caste : | Calling : |
| Religion: | Age : 60 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04.07.2025

**எதிரி ஆஜர் இல்லை குவிமுச பிரிவு 317ன் மனு செய்து அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது மணியந்தல் மேட்டுச்சத்திரத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்துவருகிறேன். சுமார் 2வருடத்திற்கு முன்னர் வேட்டவலம் ரோட்டில் ராஜாவுக்கு விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். ராஜா இருசக்கர வாகனத்தில் சென்ற போது காலை 6 மணிக்கு விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். டாடா ஏசி வாகனம் மோதியதாக சொன்னார்கள். யார் ஓட்டிவந்து மோதினார் என்று எனக்கு சொல்லவில்லை. பின்னர் நான் மருத்துவமனைக்கு சென்று மேற்படி ராஜாவைப் பார்த்தேன். மேற்படி ராஜாவின் உடலை ஒப்படைக்கும் போது என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். மேற்படி ராஜாவின் உடலை 03.30 மணிக்கு பெற்று ஊருக்கு வந்ததோம்.

**குறுக்கு விசாரணை** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : CC 244/2024 (33/2023) |
| Deposition of witness for | Prosecution : LW4 as PW3 |
| | Defence : |
| | Court : |
| Name : தாமரை கனி | Father's Name: கனகராஜ் |
| | Husband Name: |
| Village: மேட்டுச்சத்திரம் | Taluk : |
| Caste : | Calling : |
| Religion: | Age : 29 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04.07.2025

**எதிரி ஆஜர் இல்லை குவிமுச பிரிவு 317ன் மனு செய்து அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது மேட்டுச்சத்திரத்தில் வசித்து வருகிறேன். நான் வெரிடாஸ் பைனான்ஸ் நிருவணத்தில் பணி செய்து வருகிறேன். அ.சா.1யைத் தெரியும் இறந்த ராஜாவைத் தெரியும். அ.சா.2 பிரசாந்த்தையும் தெரியும். 03.07.2022ம் தேதி ராஜா ஆடு வாங்குவதற்காக தள்வாய்குளம் சந்தைக்கு வீட்டில் இருந்து காலை 05.00 மணிக்கு கிளம்பி வேட்டவலம் ரோட்டில் தளவாய்குளம் சந்தைக்கு சென்றபோது ஐந்துவீடு என்ற இடத்தில் விபத்து ஏற்பட்டதாக எனக்கு போன் செய்தார்கள். போன் செய்த நபர் யார் என்று எனக்கு தெரியாது. அதன்பின்னர் நான் சம்பவயிடம் சென்றேன். மேற்படி இறந்த ராஜா சென்ற போது எதிரே வந்த வேட்டவலத்தில் இருந்து திருவண்ணாமலை நோக்கிவந்த நான்கு சக்கர வாகனமான டாடா ஏசி மோதியதாக கேள்விப்பட்டேன். அதன் பின்னர் ஆம்புலென்சில் இறந்த ராஜாவின் பிரேதத்தை ஏற்றினோம். ராஜாவிற்கு தலையில், கால், இடுப்பு ஆகிய பகுதிகளில் காயம் ஏற்பட்டிருந்தது. திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் வைத்து போலிசார் என்னை விசாரித்தார்கள். மேற்படி ராஜாவின் பிரேதத்தில் இருந்த காயங்கள் அரசு மருத்துவமனையில் வைத்து பார்த்தேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

போலிசார் என்னை விசாரித்த போது போனில் தகவல் வந்தபிறகு நான் சம்பவயிடம் சென்று பார்த்தேன் என்று நான் சொன்னேன் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : CC 244/2024 (33/2023) |
| Deposition of witness for | Prosecution : LW3 as PW2 |
| | Defence : |
| | Court : |
| Name : பிரசாந்த் | Father's Name: சக்கரபாணி |
| | Husband Name: |
| Village: மேட்டுச்சத்திரம் | Taluk : |
| Caste : | Calling : |
| Religion: | Age : 31 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04.07.2025

**எதிரி ஆஜர் இல்லை குவிமுச பிரிவு 317ன் மனு செய்து அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது மேட்டுச்சத்திரத்தில் வசித்து வருகிறேன். நான் MA படித்துள்ளேன். 03.07.2022ம் தேதியன்று காலை சுமார் 6 முதல் 6.15 மணி இருக்கும் போது அப்போது எனக்கு போன் செய்து ஏந்தலுக்கு அருகில் உள்ள ஐந்துவீடு என்ற இடத்தில் ராஜா சந்தைக்கு இருசக்கர வாகனத்தில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கிசெல்லும் போது அவருக்கு எதிரே வந்த வாகனம் கிழக்கில் இருந்து மேற்கில் சென்று மோதியதாக நான் சம்பவயிடம் சென்று பார்த்தேன். மோதிய நபர் எனக்கு தெரியாது. மோதிய வண்டி எண்ணும் எனக்கு தெரியாது. நான் மேற்படி ஐந்துவீடு என்ற இடத்திற்கு சென்று பார்த்த போது ஆம்புலென்ஸ் வந்தது. ராஜாவின் பிரேதத்தை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். நான் மருத்துவமனைக்கு சென்று ராஜாவை பார்த்த போது தலையிலும், கை கால் ஆகியவை உடைந்த நிலையில் காணப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

போன் மூலமாக தகவல் வந்த பிறகு தான் நான் சம்பவயிடம் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். மேற்படி விபத்திற்கு யார் காரணம் யாரால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மோதிய நான்கு சக்கர வாகனத்தின் எண் மற்றும் எதிரியின் பெயர் மற்றும் எதிரியின் அங்க அடையாளங்கள் எனக்கு தெரியது என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender<br>Deposition of witness for | Case No. : CC 244/2024 (33/2023)<br>Prosecution : LW1 as PW1<br>Defence :<br>Court : |
| Name : கிருஷ்ணமூர்த்தி | Father's Name: பெரியசாமி<br>Husband Name: |
| Village: மேட்டுச்சத்திரம் | Taluk : |
| Caste :<br>Religion: | Calling :<br>Age : 57 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04.07.2025

**எதிரி ஆஜர் இல்லை குவிமுச பிரிவு 317ன் மனு செய்து அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது மேட்டுச்சத்திரத்தில் வசித்து வருகிறேன். எனக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள். நான் விவசாயம் செய்து ஜீவனம் செய்து வருகிறேன். எனது மகள் பெயர் ரோஜா எனது மகன் பெயர் ராஜா ஆகும். சுமார் 3 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் ஆனி மாதம் தேதி ஞாபகம் இல்லை வீட்டில் குறித்து வைத்துள்ளேன். மேற்படி அந்த தேதியில் ஐந்துவீடு வேட்டவலம் ரோடு என்ற இடத்தில் விபத்து ஏற்பட்டு விட்டது. நான்கு சக்கர வண்டியான டிப்போ என்ற வண்டியை பாண்டிச்சேரியைச் சேர்ந்த முருகன் என்பவர் ஓட்டிவந்து எனது மகன் ராஜா ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் எனது மகன் அங்கேயே இறந்துவிட்டார். சம்பவம் என்பது சுமார் 06.00 மணியளவில் நடந்தது. மேற்படி விபத்தைப்பற்றி பத்தராசலம் தலைவர் என்பவர் எனது மகன் இருசக்கர வாகனத்தில் வைத்திருந்த நோட்டில் இருந்த நம்பரை வைத்து எனக்கு

போன் செய்து சொன்னார். எனது மகன் ராஜாவிற்கு மண்டையிலும், இடுப்பிலும், கால் போன்ற இடத்திலும் அடிப்பட்டு இறந்துகிடந்தார். எனது மகனின் பிரேதத்தை ஆம்புலென்ஸ் மூலமாக திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் நான் 08.00 மணிக்கு அரசு மருத்துவமனைக்கு சென்று பிரேதத்தை பார்த்தேன். பின்னர் நான் கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்திற்கு வந்து நான்கு சக்கர வாகனத்தை ஓட்டிவந்த டிரைவர் முருகன் என்பவர் மீது புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் நான் தான் கொடுத்தேன். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆகும். பின்னர் என்னை போலிசார் விசாரித்தார்கள். சுமார் 01.00 மணியளவில் புகார் கொடுத்த தேதியன்றே பிரேதத்தை பெற்றுக்கொண்டேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எனது மகனின் பிரேதத்தை தலைவர் பத்ராச்சலம் என்பவர் தகவல் கொடுத்ததின் அடிப்படையில் தான் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன் என்றால் சரிதான். எனது மகன் மீது மோதியதாக சொல்லப்படும் முருகன் என்பவரை நான் இதுவரையில் பார்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி எனது மகன் மீது மோதிய வண்டி எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவை நான் எழுதினேனா என்றால் இல்லை, கையெழுத்து மட்டும் தான் நான் போட்டேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு படித்து காண்பித்தார்கள். மேற்படி புகாரில் சங்கதிகளைப் படித்து காண்பித்து நான் கையெழுத்து போட்டேன் என்று எந்த குறிப்புகளும் இல்லை என்றால் சரியல்ல. பிரசாந்த் என்பவர் எனக்கு என்ன உறவு முறை என்றால் தம்பி

மகன் ஆவார். தாமரைக் கனி எனக்கு என்ன உறவு முறை என்றால் தம்பி மகன் ஆவார். சக்கரபாணி என்பவர் எனக்கு என்ன உறவு முறை என்றால் தம்பி ஆவார். சாட்சி பட்டியலில் உள்ள கனகராஜ் என்பவர் எனது தம்பிதான். பரணி என்பவரும் எனது தம்பி தான். துரைமுருகன் என்பவரும் எனது உறவினரான தம்பி மகனாவார். எனது மகன் இறந்ததற்கு வழக்கு போட்டு இழப்பீடு பெற்றுவிட்டேனா என்றால் பெற்றுவிட்டேன். திருவண்ணாமலை – வேட்டவலம் ரோடு என்பது தேசிய நெடுஞ்சாலை ஆகும். அனைத்து வகையான வாகனங்களும் அந்த ரோட்டில் செல்கிறது என்றால் சரிதான். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்